**மாத்தறை மா நகர சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 04 ஆந் திகதி மா நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, மாத்தறை மா நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 169,360 இற்கான போலிச் சொத்துக்கள் உட்பட்டிருந்தது.

(ஆ) கடன்கொடுத்தோர் மீதி ரூபா 7,508,872 இனால், மூலதனச் செலவு ரூபா 7,411,746 இனால் மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 97,126 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(இ) 02 நிர்மாண வேலைகளுக்காக சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 58,523,808 இற்கான செலவுகள், நிதியேற்பாடுகள் பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த கடன்தொகையின் நிலுவை மீதி ரூபா 107,918 தொகையினை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், அதனோடு தொடர்புடைய வட்டித்தொகை ரூபா 55,243,889 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) கூட்டுத்தொகை ரூபா 841,786 தொகையான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை களியாட்ட வரி வருமானம் ரூபா 184,703 தொகை மற்றும் செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணமும் நீர்கட்டணமும் ரூபா 666,096 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(எ) மாத்தறை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,942,225 இற்கான தொகையினை செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் ஒன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 43,550,598 தொகைக்கான பங்களிப்புத் தொகை தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 288,477,942 தொகைக்கான 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 18,305,109 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டன.

**1.3.3 தொங்கல் கணக்கு**

தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தொடர்ந்தும் கணக்குகளில் முன்கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 157,496 இற்கான வரவு மீதி 2015 ஆண்டிற்கான கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாமல் மீண்டும் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 222,508,113 தொகையான பலவின கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 28,691,163 தொகையான 34 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 164,786,803 தொகையான நிர்மாணவேலை கடன்கொடுத்தோரில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 134,977,051 தொகையான 26 மீதிகள் உள்ளடங்கியிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 113,421,281 தொகையான கடன் மூலதன மீதியில் 07 வருடங்களைக் கடந்திருந்த ரூபா 111,448,622 தொகைக்கான 03 மீதிகள் உள்ளடங்கியிருந்தன.

(ஈ) திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதிகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 852,341 தொகைக்கான தேர்தல் முற்பண மீதியினை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 39,865,465 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 2,341,774 தொகைக்கான கடன் மீதி தொடர்பாக மீதியை உறுதிப்படுத்தல்களும் கூட்டுத்தொகை ரூபா 8,033,218 தொகைக்கான பொதுக் களஞ்சிய மீதி தொடர்பான விரிவான அட்டவணை ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே விவரிக்கப்பட்டுள்ள இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 156(1) மற்றும் 210(2) | கொடுப்பனவுகள் தாமதித்ததன் காரணமாக ஏதேனும் கட்டணமொன்று செலுத்துவதற்கு நேரிடின், அந் நட்டத்தை அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டுமெனினும், மின்சார விலைப்பட்டி தீர்ப்பதற்கு தாமதித்ததன் காரணமாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்த ரூபா 476,992 இற்கான மிகைவிதிப்புப் தொகை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) | இரண்டு வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 204,300 தொகைக்கான 87 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைச்சேரிச் சுற்றறிக்கை | கூட்டுப்பெறுமதி ரூபா 4,672,890 இற்கான கணனிகள் துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று 2003 ஆண்டு முதல் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி ஆணையாளரின் 1984 நவம்பர் 20 திகதிய 1984/19 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 8.1 ஆம் பிரிவை பிழையான முறையில் பொருள் கொண்டு முத்திரை கட்டண வருமானத்தை சேகரிப்பதற்காக 11 மா நகர சபை உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,365,965 இற்கான தரகு பணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 116,367,859 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப கடந்த ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 65,804,015 தொகையாகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 50,563,844 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. நிதி விளைவுகளில் ரூபா 50,563,844

இற்கான வளர்ச்சிக்கு ஏனைய வருமானங்கள் மற்றும் வருமான உதவித் தொகை அதிகரித்தல் முக்கியமாக பாதித்துள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தில் 75 சதவீதத்தை மிகைத்த மொத்த மீண்டுவரும் செலவு காணப்பட்டமையால் சபையின் வருமானத்திற்கு ஒப்பாக செலவுகள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கணிசமான உயர்ந்த பெறுமதியில் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்திருந்ததுடன், சுயமாக உருவாக்கிய வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவுகளை அணவல் செய்வதற்கு எந்த விதத்திலும் ஆற்றல் ஒன்று கிடைக்காத நிலைமை ஒன்றினை காட்டியது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்து அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 28,691,163 இற்கான மீதிகள் காணப்பட்டமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத் தன்மை நிலைமையொன்று காணப்படுவதில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வீத வரி

ஆரம்ப நிலுவை ரூபா 58,887,935 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 36,963,058 தொகைக்கான சிட்டையிடலுடன் ரூபா 95,850,994 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததது. மொத்த அறவீடுகள் ரூபா 38,673,395 தொகையாக இருந்தமையால், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 57,177,598 தொகை அளவான உயர்ந்த பெறுமதியை பெற்றிருந்தது.

#### 2.4.2 வாடகை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப நிலுவை ரூபா 44,041,863 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 20,739,284 தொகைக்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 64,781,147 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடு ரூபா 20,996,751 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 43,784,396 தொகை அளவான உயர்ந்த பெறுமதியினை பெற்றிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பழைய தங்காலை பாதை வீடமைப்புத் திட்டத்தில் வாடகையாளர்கள் 24 பேர்களிடம் ரூபா 3,985,260 தொகையொன்று 30 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டது. இந்த ஆதனங்களின் உரிமையை வதிபவர்களின் தனிப்பட்ட பேருக்கு சாட்டப்பட்டிருந்தது.

### 2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 114,280 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 119,474,040 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொதுவான சேமிப்புக் கணக்கொன்றில் காணப்பட்ட ரூபா 10,858,969 தொகையினை, நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து மேலதிக வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வெளிக்கள தொழிலாளர் பெண் ஊழியர்கள் என சேர்க்கப்பட்டிருந்த 15 பெண் தொழிலாளர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,196,930 தொகை சம்பளம் மற்றும் படிகள் என செலுத்தியிருந்த போதிலும், அவர்களிடம் போதியளவு வெளிக்கள கடமைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வு பெற்று மற்றும் இறந்த ஊழியர்களிடம் நிலுவையாகக் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 277,670 இற்கான 80 கடன் மீதிகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நீர் மானி ஒன்றில் ஏற்பட்டிருந்த நீர் ஒழுகுதலினை இனங்கண்டு திருத்தப்படாமையால் ரூபா 238,966 தொகையொன்று மீளாய்வாண்டின் போது நீர் கட்டணமாக மிகையாகச் செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 37 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மூன்றானம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் காணப்பட்ட 127 மிகைகளை முறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

#### (அ) மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்

(i) சபைக்குச் சொந்தமான ரூபா 7,092,856 தொகை கிரயத்தையுடைய 02 வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், மேலும் 17 வாகனங்களின் மைலோ மீற்றர்கள் செயற்படாமல் காணப்பட்டன. மீளாய்வாண்டின் போது ரூபா 3,631,351 இற்கான எரிபொருள் செலவு அவ் வாகனங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) சபையினால் பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 5,592,000 தொகை கிரயத்தையுடைய 07 வாகனங்கள் தொடர்பாக 2015 ஜூலை 10 ஆம் திகதிய

2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொறியும் பொறித்தொகுதியும்**

சபைக்குச் சொந்தமான ரூபா 3,300,000 தொகை கிரயத்தையுடைய பாதைக் தகர்க்கும் இரண்டு இயந்திரங்கள் செயலிழந்திருந்தது.

**(இ) செயற்படாத வங்கிக் கணக்குகள்**

மக்கள் வங்கியின் 15182 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் காணப்படுகின்ற ரூபா 169,630 தொகையான செயற்படாத மீதி தொடர்பாக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**3.5 நிர்மாண வேலைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நேர் தொழில் அடிப்படையில் நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த பண்டங்களில் இருந்து ரூபா 5,577,524 தொகைக்கான பண்டங்கள் முறைப்படி வழங்கியிருக்காததுடன் ரூபா 696,015 தொகைக்கான பண்டங்கள் நிர்மாணவேலை மேற்கொள்ளப்படும் இடம் குறிப்பிடப்படாமல் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பாதையொன்றில் 600 மீற்றர் தூரத்திற்கு தார் போட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 410,808 கிரயம் மற்றும் ரூபா 1,789,428 கிரயத்திற்கான இரண்டு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. முதலாவது மதிப்பீட்டை விட இரண்டாவது மதிப்பீட்டின் விலைகள் 355 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அங்கீகரிக்கப்பட்டிருந்த எண்ணிக்கையை விட ரூபா 248,132 இற்கான பண்டங்களும் முறைசாரா விதமாக களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

**3.6 ஒப்பந்த நிருவாகம்**

கடந்த ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து நேர்த் தொழில் அடிப்படையில் 52 நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்காக ரூபா 20,860,241 தொகைக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி ரூபா 14,536,877 தொகைக்கான 41 நிர்மாண வேலைகள் தொடர்பாக முடிவுற்ற வேலை அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

**3.7 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையின் குப்பைகள் சேகரிப்பதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 103,918,785 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2009 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதியேற்பாடுகளின் மீது ரூபா 13,598,762 இற்கான தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை மத்திய நிலையம் அமைந்துள்ள கட்டிடம், உயிர்வாயு உற்பத்தி நிலையம் நிர்மாணிப்பதற்காக 2011 ஆண்டின் போது வழங்கப்பட்டு அதற்காக ரூபா 64,356,614 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு செயற்திட்டம் இடையில் கைவிடப்பட்டிருந்தது. சேதனப் பசளை மத்திய நிலையம் மேற்கூறிய விடயத்திற்கு பயன்படுத்தப்பட்டமையால் வருடாந்தம் சேகரமாகும் குப்பை 12,600 தொன்கள் முறைசார் விதமாக அகற்றப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காணிக்காக 2014 அக்தோபர் மாதத்தின் பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

**3.8 சுற்றாடல் சார் சிக்கல்கள்**

2008 ஜனவரி 25 ஆம் திகதிய 16/1533 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 25 நிர்மாண வேலைகளுக்காக மா நகர சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. வர்த்தக வரி செலுத்தும் கைத்தொழில்களை சேர்ந்த 161 வர்த்தக நிலையங்களில் 97 இனால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்காமையால் சபை ரூபா 426,800 இற்கான வருமானத்தை இழந்திருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 49,604,800 தொகைக்கான சேமிப்பும், மேலும் செலவு விடயம் ஒன்றில் ரூபா 2,137,533 இற்கான பிரதிகூலமான முரண் ஒன்றும், 02 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்கு வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 43,314,487 தொகையும் காணப்படுகின்றமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபச/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மா நகர சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகிற்கு இணைக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 980,784 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபை விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) கணக்கீடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு